செ.வெ.எண் : 948/2017 நாள் : 09.12.2017

# பத்திரிகைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடலில் ஏற்பட்ட ஒகி புயலின் காரணமாக, காற்றின் சீற்றத்தால் திசை மாறி பிற மாநில மீன்பிடித் துறைமுகங்களில் கரை சேர்ந்ததைத் தொடர்ந்து, மீன்வளத்துறையைச் சேர்ந்த அலுவலர்களும், மூத்த இந்திய ஆட்சிப் பணியாளர்களும் பிற மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேற்படி அலுவலர்கள் ஆய்வு செய்து அனுப்பிய மாநிலங்கள் வாரியாக சேர்ந்துள்ள 2011 மீனவர்கள் பெயர் 245 மீன்பிடி படகுகள் பெயர்கள் அடங்கிய முதல் பட்டியல் மீனவ கிராம பொது மக்கள் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக 09.12.2017 தேதியிட்ட பட்டியல் அரசால் வெளியிடப்பட்டது.

தற்போது 696 மீனவர்கள் மற்றும் 70 படகுகள் அடங்கிய இரண்டாவது பட்டியல் விபரங்கள் சரிபார்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது.மேலும் இந்த விபரங்களை மீனவ கிராம பொதுமக்களின் தகவலுக்காக www.kanyakumari.nic.in என்ற வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

சஜ்ஜன்சிங் ரா.சவான்
மாவட்ட ஆட்சித் தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி.**